<u>சுருக்கம்</u>

சிறுபான்மையினர் நலன்–இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையின மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்–பயனாளிகளைத் தேர்வு செய்ய நெறிமுறைகள் வகுப்பது–ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிநஆபி) த் துறை</u>

**அரசு ஆணை (நிலை) எண்.58** **நாள்16.7.2009.**

**திருவள்ளுவர் ஆண்டு 2040**
**ஆனி 32**

படிக்கப்பட்டது :–

1. அரசு ஆணை (நிலை) எண்.49, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 22.5.2008.
2. சிறுபான்மையினர் நல ஆணையர் ந.க. எண்.டிஎம்.1/482/2008, நாள் 11.8.2008.
3. குற்ற வழக்கு தொடர்பு இயக்குநர் கடித எண்.7536/டிஒபி/அ3/2008, நாள் 19.12.2008.
4. சிறைத்துறை தலைமை இயக்குநர் கடித எண்.57465/PW1/2008, நாள் 6.2.2009.

–––––

**<u>ஆணை:–</u>**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையின மக்களுக்கு மறுவாழ்வு அளித்து உதவிடும் வகையில் அவர்கள் சிறுவணிகம் செய்ய அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் 300 பேர்களுக்கு ரூ.10,000/– வீதம் மறுவாழ்வு நிதியுதவி வழங்க ரூ.30.00 இலட்சம் அளித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சிறுபான்மையினர் நல ஆணையர் சிறைத் துறை நன்னடத்தை அலுவலருடன் கலந்தாலோசித்து இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்ய கருத்துரு அனுப்பியுள்ளார். அக்கருத்துரு குற்ற வழக்கு தொடர்பு இயக்குநர் மற்றும் சிறைத் துறை தலைமை இயக்குநர் ஆகியோருடன் கலந்து ஆய்வு செய்யப்பட்டது.

**3.** இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறைத் தண்டனை அனுபவித்த சிறுபான்மையினர் மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ் நிதி உதவி அளிப்பதற்கு கீழ்க்கண்ட நெறிமுறைகளை வகுத்து அரசு ஆணையிடுகிறது.

(அ) விண்ணப்பதாரர், இனக்கலவரங்களால் உடல் உழைப்பு செய்ய இயலாத வகையில் ஊனமுற்றிருந்தால் / பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவராக அல்லது இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் பெருங்குற்றங்களாக கருதப்படும் எந்தவொரு செயலிலும் ஈடுபடாதவராகவும், முதன்முறையாக சிறு குற்றத்திற்காக தண்டனை அனுபவித்து மீண்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர், உடல் ரீதியாக பாதிக்கப்பட்டவராய் இருப்பின் மாவட்ட அரசு மருத்துவரிடம் பரிசோதித்து அதற்கான சான்று சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டிருப்பின் அதுதொடர்பாக, வட்டாட்சியரிடமிருந்து பொருள் இழப்பீட்டுச் சான்று சமர்ப்பிக்கவேண்டும்.

(ஈ) இந்திய தண்டனைச் சட்டம்(Indian Penal Code)விதிகளின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள சிறு குற்றங்கள் மற்றும் தண்டனைகளைக் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(உ) விண்ணப்பதாரர் ஆண்டு வருமானம் நகர்ப்புறங்களில் வசிப்போர் ரூ.36,000/–க்கு மிகாமலும், கிராமப்புறங்களில் வசிப்போர் ரூ.24,000/–க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

**4.** சிறை தண்டனை அனுபவித்து மறுவாழ்வு நிதி கோருபவராக இருந்தால் கீழ்வரும் நெறிமுறைகளை கையாள வேண்டும்.

- விண்ணப்பதாரரின் விண்ணப்பங்களை பரிசீலனைக்கு எடுப்பதற்கு முன் பயனாளியைத் தெரிவு செய்யும் பொருட்டு மாவட்டங்களில் உள்ள சிறைத்துறை நன்னடத்தை அலுவலரிடமிருந்து பின்வரும் இனங்கள் மீதான அறிக்கையை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரால் பெறுதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் தடை செய்யப்பட்ட எந்தவொரு அமைப்பின் உறுப்பினராகவோ முனைப்பான பங்கேற்பாளராகவோ இல்லாமல் இருத்தல் வேண்டும்.
- தற்போது விண்ணப்பதாரர் மீது எந்தவொரு குற்றவழக்கும் நிலுவையில் இல்லாமல் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரரது தற்போதைய நன்னடத்தையை உறுதி செய்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் முதன்முறையாக சிறு தண்டனைக்காக சிறை சென்று வெளிவந்தவராக இருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரர் தமிழகத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

**5.** மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மேற்குறிப்பிட்ட முழு விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை உரிய சான்றாவணங்களுடன் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட அம்சங்களையும் கருத்தில் கொண்டு சிறுபான்மையினர் நல ஆணையருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

(அ) <u>இனக்கலவரங்களால் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள்</u>

- உடல் ரீதியாக பாதிப்பின் தன்மைக்கு ஏற்ப பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம்.
- மருத்துவ சிகிச்சை பெற்ற காலம் (உள் நோயாளி/புற நோயாளி)
- தொடர் சிகிச்சை விவரம் (ம) செலவினம்.

(ஆ) <u>பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள்</u>

- வீடு (ம) உடைமைகளை இழந்த விண்ணப்பதாரர்களின் இழப்பின் அளவை மதிப்பிடுதல்.

(இ) <u>சிறைத் தண்டனை அனுபவித்தவர்கள்</u>

மேற்படி நன்னடத்தை அலுவலரின் அறிக்கையை ஆய்வு செய்தல்.

**6.** இதன் மூலம் பயனாளிகள் தங்கள் வாழ்க்கையை கண்ணியத்துடன் தொடரவும், வாழ்வாதாரத்தை பாதுகாக்கவும், சிறு வணிகங்கள் மேற்கொள்ளும் பொருட்டு மறுவாழ்வு நிதி ரூ.10,000/–க்கு மிகாமல் வழங்கிட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் பரிந்துரை செய்ய வேண்டும். இப்பரிந்துரையை சென்னையிலுள்ள சிறுபான்மையினர் நல ஆணையர், அவர்களுக்கு பிரதி மாதம் 2–ம் வாரம் பணி இறுதி நாளான வெள்ளிக்கிழமைக்குள் (உரிய பரிந்துரைகள் விண்ணப்பத்துடன் கிடைக்கும் வகையில்) வந்து சேரும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதை பிரதி மாதம் 2–ம் அரை திங்களில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்வார். அதன்படி சிறுபான்மையினர் நல ஆணையர் மேற்படி ஆய்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்களுக்கு, மறுவாழ்வு நிதியினை உரிய பயனாளிகளுக்கு வழங்கிட நிதி விடுப்பாணையை வழங்குவார். இந்த நிதியினை அதிகபட்ச வரம்பிற்குள் மாவட்ட ஆய்வுக்குப்பின் பரிந்துரைக்கும் தொகையை இயக்குநர் அளிப்பார். மேலும் இத்திட்டம் தொடர்பாக விரிவாக்கம் செய்யவும், நிதியுதவி வழங்க நிதியினை பெறுவதற்கும், நிதி கட்டுப்பாட்டு அலுவலராக இருப்பார். விண்ணப்ப படிவத்தில் மனுதாரரின் புகைப்படத்தை ஒட்டிட வேண்டும். மேலும் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பயனாளிகளின் பதிவேட்டிலும் பயனாளிகள் ஒரு புகைப்படத்தை ஒட்டி உரிய அலுவலர் (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்) மேலொப்பம் செய்து பராமரிக்கும் வகையில் இரண்டு புகைப்படங்களை கூடுதலாக விண்ணப்பதாரர் அனுப்ப வேண்டும்.

7. இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறை தண்டனை அனுபவித்த சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பயனாளிகளை தெரிவு செய்ய மேலே பத்தி 3 முதல் 6 வரை தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை தவறாது பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு இதன் மூலம் உத்தரவிடுகிறது.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.39751/பிமிபி/09, நாள் 13.7.2009–ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. நா. இராமநாதன்,
அரசுச் செயலர்.

பெறுநர்
ஆணையர், சிறுபான்மையினர் நலன், சென்னை–2.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
மாநில கணக்காயர்(தணிக்கை), சென்னை–6.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு), சென்னை–1.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
நகல்
நிதி(பி,மிபி/வ.செ.I/வ.வ)த் துறை, சென்னை–9.
உள்(சிறை)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.